கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

அ.வ.எண்.**272/2023**

வாதி தரப்பு 1 வது சாட்சி ராமமூர்த்தி என்பவரின் வாக்குமூலம் (1869 ம் ஆண்டு சாட்சியசட்டம் 44 வது பிரிவு 6 வது விதியின் ஏற்பாட்டின்படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமமூர்த்தி | சாதி | |
| தகப்பனார் பெயர் | குருசாமி | சமயம் | இந்து |
| கிராமம் | இராஜபாளையம் | தொழில் | சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |
| தாலுகா | இராஜபாளையம் | வயது | 74 |

நாள் : 07.04.2025

வா.சா.1

முதல் விசாரணை**:** நான் இந்த வழக்கில் 1 ம்வாதி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. 23.08.1961 தேதியிட்ட தபசில் 1 முல் 9 இலக்க சொத்துக்களுடைய பாகபிரிவினை ஆவணம் சான்றிட்ட நகல் வா**.**சா**.**ஆ**.1**. 19.08.1966 ம் தேதியிட்ட பிராது 10 வது இன சொத்தை இராஜம்மாள் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா**.**சா**.**ஆ**.2.** பிராது 11 வது இன சொத்திற்கு இராஜம்மாள் பெயரில் உள்ள கிரைய ஆவணம் வா**.**சா**.**ஆ**.3**. 05.08.2023 ம் தேதி நான் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பு நகல் வா**.**சா**.**ஆ**.4.** அதற்கான அஞ்சலக ரசீது வா**.**சா**.**ஆ**.5.** 1 மற்றும் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா**.**சா**.**ஆ**.6.** 05.08.2023 ம் தேதி நான், 1 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பு வா**.**சா**.**ஆ**.7.** 1 ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா**.**சா**.**ஆ**.8.** அதற்கான அஞ்சலக ரசீது வா**.**சா**.**ஆ**.9.** 1 ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா**.**சா**.**ஆ**.10.** நான் 26.09.2023 ம் தேதி அனுப்பிய ரீஜாயின்டர் அறிவிப்பு வா**.**சா**.**ஆ**.11.** அதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா**.**சா**.**ஆ**.12.**

1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.**13.** பிராது சொத்துக்களுக்கான வில்லங்கசான்றிதழ் வா.சா.ஆ.**14.** ஆண்டாள் இறப்புசான்றிதழ் கணினிநகல் வா.சா.ஆ.**15.** ஆண்டாள் வாரிசுசான்றிதழ் கணினிநகல் வா.சா.ஆ.**16.**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)